
உ

65-வது திருவிளையாடல்

அசுவத்தேசப்படலம்

அசுவத்தராதர் சரிதம்.






சச்சிதாநந்தம் பிரஸ்,

கோமளேசுவரன்பேட்டை, சென்னை.

1918.



ஓம் தத் சத்

பரப்பிரஹ்மணே நம:.

65-வது திருவிளையாடல்

அசுவத்தேசப்படலம்.

ஸ்ரீ அரசப்ப ஸ்வாமிகள்

சரித்திரம்.

மதுரை

ஸ்ரீ பிரஹ்மாநந்த குருநாதன்

ஆஞ்ஞையின்படி

ஸ்ரீ குமாரஸ்வாமி சாஸ்திரிக ளவர்கள்

இயற்றிய சுலோகமும்,

ஸ்ரீ பிரஹ்மாநந்த குருநாத னியற்றிய தமிழும்,

நியாய சந்திரரும் - வேதாந்த பாஸ்கரருமாகிய

கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ வீரசுப்பய்ய ஸ்வாமிக ளியற்றிய செய்யுளும்.

இவை கோவிலூர்

ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிகளாற் பரிசோதிக்கப்பெற்று

மதுரை

ஸ்ரீ பிரஹ்மாநந்த குருஸ்வாமிகளவர்களின் பாதசேகரரும்,

ஷை மடாலயாதிபதியுமாகிய

ஸ்ரீ அத்வைதாநந்த ஸ்வாமிகளால்

பிரகடனஞ் செய்யப்பட்டன.



முகவுரை.

இந்நில வுலகின்கண்ணுள்ள ஜீவர்கள் அநர்த்த நிவர்த்தி பரமாநந்தப் பிராப்திவடிவ தமது ரூபமான மோக்ஷத்தினை யடையும்பொருட்டுச் சர்வஞ்ஞத்துவாதி கல்யாண குணங்க ளோடு கூடிய பரமேஸ்வரர் குரு மூர்த்தியாக எழுந்தருளி வருவரென்பது உலகப் பிரசித்தமும் சாஸ்திரப் பிரசித்தமுமாம்.

அவ்வாறு அவதரித்த மூர்த்தங்களுள் மதுரையின்கண் சமாதியுற்று ஜோதிர் லிங்கமாக விளங்கும் அசுவத்தநாத மூர்த் தமு மொன்றாம்.

அந்த அரசப்ப ஸ்வாமிகளென்னு முனிவர் கோவிலூ ரென்னும் சமிவந க்ஷேத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள காரைக் குடியில் நாட்டுக் கோட்டையா ரென்னும் தநவைஸ்ய சிகா மணிகள் குலத்தில் அவதரித்துக் கோவிலூர் ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாநதேசிக ஸ்வாமிகளைக் குருவாக அடைந்து பிரஹ்ம ஞாநியாக இருந்து அநேக அற்புதங்களைச் செய்து கலியுகம் 4975-ல் சமாதி யுற்றூர்கள்.

மேற்படி சுவாமிகள் சரித்திரத்தினைப் பலகாலும் கேள்வி யுற்று அதன்கண் மிகவும் அவாவுண்டாய் அது வெளிவரின் பலர்க்கும் உபகாரமாமென யான் கருதி ஆலாஸ்யம் என்னும் மதுரைப் பிரஹ்மாநந்த குரு ஸ்வாமிக ளவர்களின் மடாலயாதி பதியாகிய ஸ்ரீ அத்வைதாநந்த ஸ்வாமிகளிடத்திற் கூறினேன். அதற் கியைந்து அவர்கள் மடத்திலிருந்த பழைய பிரதியை நகல்செய்து அச்சிடுமாறு ஏற்படுத்தினூர்கள். ஆதலின் அவர் கள் தயாளுகுணம் பாராட்டத் தக்கதே.

இன்னும் சிற்சில சரித்திரங்கள் இதி லில்லாதன கர்ண பரம்பரையாகவும் கேட்கப்படுகின்றன. அவையும் சேர்த்து இதன் இரண்டாம் பதிப்பிலாவது, "மஹாத்ம சரிதாமிர்தம்" என்னும் நூலிலாவது அச்சிடும்படி இறைவரருள் புரிவராக.

இன்னும், கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக ஸ்வாமிக ளவர்களால் ஒவ்வொரு ஆத்மநாமத்திற்கும் ஒவ்வொரு செந்தமிழ்ப் பாக்களாக இயற்றப்பட்டு இலட்சணு விர்த்தி (லக்ஷணங்களை மீண்டும் மீண்டும் அப்பியசித்தல்) என்று யாண்டும் பிரசித்தமாக விளங்கும் நூலுக்குச் சம்ஸ்கிருதத்தில் 380 சுலோகமாக இயற்றப்பட்டு இலக்ஷணுவிர்த்தி எனப் பெயர் பூண்டு ஸ்ரீ பிரஹ்மாநந்த குருஸ்வாமிக ளவர்கள் மடாலயத்தில் இருக்கின்றது. அஃதும் பொழிப்புரையுடன் வெளிவந் துலவ ஸ்ரீ கான்மாறி யாடிய கற்பகக் கருணைக்கடல் நடனர் கருணை பாலிப்பாராக.

காசிகாநந்த ஸ்வாமி,

[1—2—1198.] கோவிலூர்.

உ

ஓம் மகாகணபதயேநமஃ.

ஸ்ரீகோயிலூர் ஆண்டவரென்னும்
ஸ்ரீமுத்திராமலிங்கஞான தேசிக பரமாசிரியர்
அவ்வவ்வமயங்களில் ஸ்ரீ அசுவத்தேச
மகா முனிவர் முதலிய தமதன்பர்கட்கருளிய
உபதேச மகாவாக்கியங்களாகிய

சுவாநுபவத் திருவாக்கியங்கள்.

1. சர்வம் பஞ்சபூதமயம். 2. சர்வம் மித்தை. 3. சர்வஞ் சின்மயம். 4. நாமரூப நாடாமல் பகிர்முகமன்றி யிருக்கின்றது. 5. பரபூரணமாகிய தனக்கு என்னவேண்டுவது. 6. எல்லாந்தோற்றமாத்திரம். 7. அதிட்டானமாகிய தானைப்பார்க்கும்போது நானவனெங்கே. 8. உபசாந்தமுந் துரியம், அறியாத விடயமுந் துரியம். 9. பாச பந்தம் வரும்போது பாச நிவிருத்தியுந் தோன்றவேண்டும். 10. சுகதுக்கமுள்ளவரையில்

தாரதன்மியநீங்காது. 11. பிரபஞ்ச மித்தியாபாவனையினாலும் தன்மயபாவனையினாலும் காண்பான் காட்சி நீங்கும். 12. எல்லாவற்றையுந் தான் அறிந்ததாயும் தன்னை யொன்றினாலும் அறியப்படாததாயும் இப்படிக்காண்கின்றதே பிரத்தியக்ஷஞானம். 13. தன்னிடத்திலகங்காரம் - பிராந்தி மூலப்பிரமை (மயக்கம்). 14. இங்கும் அங்கும் இராகத்வேஷமன்றியிலிருந்தால் இரண்டுக்கும் ஐக்கியம். 15. பிரத்தியக்ஷமானவிடயமும் அப்பிரத்தியக்ஷமான விடயமும் திருக்குவாகிய ஞானத்திற்குத் திருசியமாம். 16. வஸ்து நிர்ணயத்தில் பிரபஞ்சந்தானல்லவென்றும், அத்துவிதத்தில் தன்னைத்தவிர வேறில்லாதபடியினாலே தானென்றும். 17. சோகமடைகிறதினாலே துக்கம், மோகத்தினாலே சுகம். 18. இத்தனையு மாயாமயமல்லவோ உள்ளபடிமுடியும். 19. திருசியந் திருக்குவையன்றியிற் றோன்றாது. 20. அதிட்டானத்தைத்தவிர ஆரோபத்திற்கு வடிவமில்லாதபடியினாலே எல்லாம் அதிட்டானமயந்தான். 21. இந்திரஜாலக்காரனிடத்தில் கந்தருவபுரந்தோன்றி நில்லாமலழிந்து போவதுபோலத் தன்னிடத்திலுண்டாகாநின்ற சங்கற்பமெவ்வளவோ அநேகமாய் வந்து மொன்றுநிற்கவில்லை. 22. உபசாந்தமானாலுந் தன்மயமானாலும் சகலத்தியாகந்தான். 23. நிவிர்த்தியாயிருக்கவேண்டும், அல்லது நாமரூப நாட்டம் வந்தால் அத்துவிதமாயிருக்கவேண்டும். 24. தன்னைச் சீவபாவனையாகக் காணுகிறதே பிறவி, தன்னைச் சிவ ரூபமாகக் காணுகிறதே மோக்ஷம். 25. சகல கலைக்ஞானம் வல்லவர்கட்கும் நிராசைவேண்டுவது தான். 26. எல்லாஞ்சிவன் செயல்தான். 27. எல்லாஞ் சிவாகாரந்தான். 28. சிற்றறிவிலேதான் உயர்வு தாழ்வான தாரதன்மியங்கள். 29. பேரறிவிலே சமசாக்ஷிதான். 30. உபசாந்தத்திற் சச்சிதானந்த மூன்று மனுபவமாய்க் காணவேண்டும். 31. பிரபஞ்சத்திற் சொல்லப்பட்ட பேதங்களெல்லாம் சிற்றறி விலேதா னென்ற றியவேண்டும். 32. எல்லாமுன்னுடைய செயலேயானால் கொடுத்தது யார் வாங்கினது யார். 33. ஈதனைத்துஞ் சொரூபமே, யானிங்கெத்தை யிச்சிப்பே னெதையிகழ்வே னெனல் பற்றின்மை,

இதில் யாருக்கும் நம்பிக்கைவரவேண்டுவதுதான். 34.தேகோக புத்தியினுலே அருந்தல், இதனுலே பொருந்தல், இதனுலே சகல ஆசையும் வந்தது. 35. நிருவிகற்ப சமாதியில் என்ன தோற்றம் வந்தாலும் தன்னைத்திருக்காகவே காணவேண்டுவது தான். 36. பிரபஞ்சத்திற் பஞ்சவிடய சுகத்திற் பொருந்தும் போது பிரியமாயிருக்கும், பிற்பாடு தனக்குத்தானே வெறுப் புக்காணும்; இதுபோலவே தன் சொரூபசுகத்திலும் பொருந் தும்போதும் பிரியம்வரும்; எத்தனைநாளிருந்தாலும் பிரியம் வாங்காது. 37. சமுத்திரத்தில் முன்வந்த அலைபோய்ப் பின் னலைவருகிறதற்கு முன்னுலே சமுத்திரமாத்திர மிருந்தது போலத் தன்னிடத்திலு முன்னுலே வந்த கடபடநினைவு போய்ப்பின்னுலே வருகிற நினைவுக்குமுன் தானிருந்தது; இதனுலே பிரபஞ்சம் அசத்து,தான்சத்து; தன்னையனுபவிக்கிறதும் இந்த நிலைதான். 38. பூமியிலுண்டான வஸ்துக்களைக் கற்பிதமென் றுந் தன்மயமென்றுஞ் சொல்லலா மிதுபோலச் சிதாகாசத் திற்கு மேலில்லாதபடியினுலே அதிலுண்டானவைகளைக் கற் பிதமென்றுந் தன்மயமென்றுஞ் சொல்லலாம்.39. வகையாகக் கண்டு மயங்காமல் தொகையாகக்கண்டு சும்மாயிருக்கவேண் டும். 40. சாதுசங்கமே சகலசன்மார்க்கத்திற்கும் ஏது. 41. உபசாந்தத்திற் காண பானக்காட்சியில்லை. 42. மேல் நனவு போலிராநின்ற துரிய நிலையில் சர்வதுக்க நிவிர்த்தி. 43. உற் றவா றெதுவரு மது வருக. 44. எல்லாங் கதைதான். 45 எல் லாம் புலப்பந்தான். 46. பிறர் குற்றத்தைத் தனதாக எண் ணிக்கொண்டு தன்குற்றத்தை விசாரிக்கவேண்டும். 47. சிற் றறிவாகிய சீவ அறிவே எல்லாவற்றிற்கு மூலம். 48. மனது முதலாகிய பிரபஞ்சவியல்புகளும் ஏகாடம்பரந்தான். 49. ஞானநாட்டத்திலே சிரத்தையும் பிரபஞ்ச நாட்டத்திலே அசி ரத்தையும். 50 தத்துவா தத்துவ விசாரம்பண்ணி அதத்து வத்தைத் தள்ளித் தத்துவத்தைத் தானுகக்கண்டு சந்தேகவிப ரீதமற இருக்கவேண்டும். 51. சனன மரணமு நினைவுமாத் திரம். 52. நாமரூபமாய் நாடுகிறதைத் தள்ளிச் சொரூபமாக நாடுகிறதே சமநிலை. 53. குருவாக்கியத்திற் சந்தேகவிபரீத

மன்றியி லிருக்கிறது மெய்ப்புருடார்த்தம். 54. தன் சுபாவ நிலையில் நினைவிற்கு நித்தியத்துவ மில்லாததனாலே பிரபஞ்ச மித்தைதான். 55. அதிஷ்டான ஞான நிலைமையுள்ளவர்களுக்கு எல்லாமாகிய அத்துவித ஞானமும் வரும். 56. பற்றின்மையாகிய துரிய நிலைமையுள்ளவர்களுக்குப்போன காரியத்திலும் வருகிற காரியத்திலும் நினைவு தோன்றாமலிருந்தாற் சாக்ஷாத்காரந்தான். 57. தான் சித்ரூபனென்கின்றபுத்தி வாங்காமலிருந்தால் நானீயென்கின்ற பேதமாகிய அஞ்ஞான நீக்கம்வரும். 58. நிகழ்காலமாகிய எதிர்காலத்திற் செய்காரியங்களிற் பின் வருத்தமுஞ் சௌக்கியமு மறிந்து செய்ய வேண்டும். 59. அக்கினியில் எவ்வளவு பொறிக்கிளம்பினாலும் அக்கினிக்கு இலயமில்லாததுபோலப் பூரணமான தன்னிடத்தில் தேகாதி முதலாய் வாழ்ந்ததாயுந் தாழ்ந்ததாயும் என்ன நினைவு வந்தாலும் கற்பிதம், தான் நித்தியம். 60 எல்லாமானதாகத் தன்னையறிந்தால் ஈதலுமிரக்கமும் வரும், இராகத்வேஷம் வராது. 61 தன்னிடத்தில் பெருமை சிறுமை பகை உறவு சுக துக்கமாய் வருகிற சங்கற்பம், கற்பிதம் ஆரோபம் அத்தியாசந்தான். 62. சரீரமுதலான பிரபஞ்சங்காலத்தில் உட்பட்டபடியினாலே அதினிடமாய் வாராநின்ற உயர்வு தாழ்வு வருத்தங்களுக்குப் பிரமாணமில்லை. 63. பிரபஞ்சத்தில் விவேகத்தினாலே குணத்தைப் பொருளாய்க்கொள்ளாமல் குற்றமே காணவேண்டும். 64. ஒன்றிலே தோன்றி யனைத்துருவமான வுணர்விற்குப் பகையுறவென் றுரைப்பதெங்கே. 65. சித்ரூப னென்கின்ற புத்திமறந்தால் உடனே விக்ஷேபமும் விபரீதமும் வரும். 66. சுவரிடத்திலுண்டான சித்திரம் வத்து வாகாது; இதுபோலத் தன்னிடத்திலுண்டான சர்ப்ப முதலாயின வத்து வாகா. 67. தன்னைப் பஞ்ச கிருத்திய முடையவனாகக் கண்டால் ஜனன மரணந் தனக்கில்லை. 68. துரிய நிலையிலும் எல்லாஞ்சின்மயமென்ற நிலையிலும் புத்தி யழுத்தம்வேண்டும். 69. கூத்தாடியைப்போலக் கூத்து நிலையல்லாததுபோல எல்லாங்கூத்தாகக்கண்டால், தான்நித்தியந்தான். 70. பிரமாமுதற் றம்பப் பூச்சிபரியந்தம் நிலைமை

யில்லாதபடியினலே தாஞெருவன் மாத்திரமிருக்கிறவன் இத ஞலும் அத்துவிதந்தான். 71. ஜகத்தெல்லாந் தன்னைத்தவிர இல்லாதபடியினலே தானே யெல்லாமானதாலும் அத்துவிதந் தான். 72. சரீரமெடுத்து விசாரந்தோன்றினவரைக் குள் ளாக வெகு விதங்களாக உக்கிரட்டமென்று சொல்லப்பட்ட பேர்க ளிருக்கவில்லை யானதால் தேகாதி முதலானவைகளி லென்ன திரமில்லை. 73. பிரபஞ்சங் காலத்திரயத்திஞு மில் லாதபடியினலேயும், ஒரு நினைவு வரும்போது ஒரு நினைவு அழிந்துபோகிறபடியினலேயுங் காணப்பட்டதெல்லாம் அழி யப்பட்டுப் போகிறபடியினலேயும் மித்தையென்று சொல்லு கிறதிலே சந்தேகமில்லை. 74. திருநதித் துறைகளெல்லாந் தீம்புனல் வறந்தவேயோ. 75. அக்கினியிலுண்டாகா நின்ற பொறிக்கு அனல் காரணமானதுபோலச் சகத்திற்கு ஆத்மாவே காரணமல்லாமல் இடையிலொன்றுஞ் சொல்லத்தக்கதில்லை. 76. பழுதையிலுண்டான பாம்பைப் பழுதையென்று சொல் லலாம், இதுபோலப் பிரஹ்மத்திலுண்டான சகத்துப் பிரஹ்மந் தான். 77. கர்மகர்த்தாவாய்க் காணும்போது கர்த்திருதந்திரம், நித்தியமாய்ப் பூரணமாய்க் காணும்போது வத்துதந்திரம். 78. காரணகாரியமா யுள்ளதுக்குப் பரிச்சின்னத்துவமுண்டு, நிஷ் காரணமா யிருக்கின்ற ஆத்மாவுக்கு அபரிச் சின்னத்துவ மும் பூரணமுமுள்ளதுதான். 79 சகல சாத்திர விசாரம் பண் ணின விசார ஞானிகட்கு யான் எனது முதலான போகத்தி லாசாபாசப் பிரவிருத்தி வருகிறது பிரபஞ்சப் பிரமாண புத்தி யினலேதான். 80. அநேக செல்வமுடையவர்களுக்கு உதார புத்தியு மிரக்கமு மில்லாமல் இருக்கின்றது, அவிவேகத்தின லேதான். 81. தெய்வ வியதிரிக்தமாகச் சிவேசுர சகத்துக்க ளில் கட்டுப்பாடாய்ப் பேசாநின்ற வசனங்களெல்லாம் புத்தி மான்கட்கு நச்சு வசனங்களாய்த் தோன்ற வேண்டும். ஸ்ரீ அசுவத்தேச மகாமுனிவர் முதலிய தமதன்பர்கட்கருளிய உப தேச மகாவாக்கியங்க ளென்னும் சுவானுபவத் திருவாக்கியங் கள்.

முற்றுப்பெற்றன. சிவோகம்.

ஓம் மகா கணபதயே நம:

ஸ்ரீபிரஹ்மாநந்த குரு நாதன்மீது ஸ்துதி.

ப்ரஹ்மாநந்தம் பரமவிபவம் மாரசத்ரும் தயா-
ளும் ஸாக்ஷாத்தேவம் ஹ்ருதயகமலோல்லாஸிதம்
ஜ்ஞாநஸூர்யம் தத்வாதீதம் கரகலிதசிந்முத்ர-
மாநந்தமூர்த்திம் சாந்தம் மரகதமணிம்
பாலஸ்வாமிசிஷ்யாதி ஸேவ்யம் || 1

பரமவிபுவாயும், மார சத்ருவாயும், தயாளுவாயும், சாக்ஷாத் தேவராயும், மநமாகிய கமலத்தில் விளங்குபவராயும், ஞாந சூரியராயும், தத்துவாதீதராயும், கரத்திற் சின்முத்திரை யுடையவராயும், ஆநந்த மூர்த்தியாயும், சாந்தராயும், மரகத மணியாயும், பால ஸ்வாமி என்னும் சிஷ்யர் முதலியோரால் சேவிக்கப் பட்டவராயும் இருக்கின்ற ஸ்ரீ பிரஹ்மாநந்த குருவை (நான்) நமஸ்கரிக்கின்றேன். 1

ஏகம் வீரமநாதிமத்யஸ்தாநம் பாசாடவீச்சே-
தநம் நாதம் லோகவிபூஷணம் ஸகலகுரும்
நீபாடவீசம் விபும் | த்ருஷ்டாந்தார்த்தவிசார
மார்க்கநிபுணம் நித்யம் சிவம் தாண்டவம்
சிஷ்யவ்ராதவிமாநவிக்ரஹவரம் தேவம் க்ருபாபா-
ஸ்கரம் || 2

ஏகராயும், வீரராயும், அநாதி மத்திய ஸ்தாநராயும், பாசக் காட்டை அறுப்பவராயும், நாதராயும், லோகத்திற்குப் பூஷண ராயும், சகலர்க்குங் குருவாயும், நீபாடவீ (கடம்பவனம்)சராயும், விபுவாயும், திருஷ்டாந்தா (யுக்திய)ர்த்தத்தை விசாரிக்கும் மார்க்கத்திற் சமர்த்தராயும், நித்யராயும், சிவனும், தாண்டவ ராயும், சிஷ்யர்களாகின்ற விமாந விக்கிரகராயும், கிருபா சூரிய ராயும், தேவராயும், இருக்கின்ற ஸ்ரீ பிரஹ்மாநந்த குருவை நான் நமஸ்கரிக்கின்றேன். 2

ஏகம் காரணகார்யவர்க்கரஹிதம் மாயாதி
கம் ஸூர்யகம் ஶம்பும் லோகஹிதைஷிணம்
மம குரும் துஷ்டாதிதுஷ்டம் விபும் | ஶிஷ்டம்
கேவலமப்ரமேயமநகம் மூர்க்காதிஶத்ரூஞ்ஜயம்
வந்தே கோமலஸுந்தரம் ஸுககரம் ஸோமம்
ஸதா கூர்க்கடம் || 3

ஏகராயும், காரண காரியவர்க்க மின்றியவராயும், மாயையினைத் தாண்டினவராயும், சூரியராயும், சம்புவாயும், லோகத்திற்கு இதத்தினைச் செய்பவராயும், எனது குரவராயும், துஷ்டர்களுக்கு அதிக துஷ்டராயும், விபுவாயும், சிஷ்டராயும், கேவலராயும், அப்பிரமேயராயும், அநகராயும், மூர்க்கர் முதலிய சத்துருவை ஜயிப்பவராயும், கோமல சுந்தரராயும், சுகத்தினைச் செய்பவராயும், சதா குர்க்கடராயும், சோமராயும் இருக்கின்ற (ஸ்ரீபிரஹ்மாநந்த குருவை நான்) நமஸ்கரிக்கின்றேன். 3



65 வது திரு விளையாடல்.

ஓம் மகா கணபதயே நமஃ

பாயிரம்.

சித்தி விநாயகர் வணக்கம்.

சுத்த மாய்ச்சுக மாகித் துலங்கிய
முத்தி ராம முதல்வன் வடிவமா
யெத்தி யாண்ட வெழில்வீர சேகரச்
சித்தி யானையைச் சித்தத் திருத்துவாம். 1

ஸ்ரீ மீனாக்ஷி யம்மன் வணக்கம்.

சுந்தரர் தமக்கு மயற்கணி யாகிச் சுதரெமக் குயிர்க்கணி
யாகி, மந்திர மறையின் செயற்கணி யாகி மாதவ ரயற்கணி
யாகி, இந்திரர் தமக்கு முயர்ந்ததென் னவன்ற னெழின்மிகு
புயக்கணி யாகி, வந்தவ தரித்த கயற்கணி யளையின் வனங்
கெழு பாதம்வாழ்த் துதுமே. 2

ஸ்ரீ சுந்தரேசர் வணக்கம்.

கந்த ரத்திற்க றையலங் காரம்போ
லெந்த ரத்தையுங் கொண்டெமை யாண்டிடும்
மந்தி ரத்தின் மறைமுடி மாண்பதாஞ்
சுந்த ரப்பெருந் தோன்றலைப் போற்றுவாம். 3

ஸ்ரீ சுப்பிரமணியர் வணக்கம்.

அன்ப ரெங்குறு மங்குறு மாசைவாய்ந் தவனை
முன்ப ரற்குமெய்ம் மறைப்பொருண் மொழிந்தநா யகனை
வென்ப ரர்தர விடுத்திடும் வெற்றிவே லவனைத்
தென்ப ரங்கிரி மேவிய தேவனைத் தொழுவாம். 4

3. [illegible]

பாதத்தில் சேவிக்கின்றவர்கட்கு, ஆறு சாஸ்திரங்களின் ஞானத்தினையும், கவித்துவத்தினையும், பிரஹ்ம ஞானத்தினையும், கொடுக்கின்றவராயும், கார்த்திகை முதலிய 6 நக்ஷத்திரங்களையும் தாயாக உடையவராயும், தேஜஸ் உடையவராயுமிருக்கின்ற, ஷண்முகரை நான் நமஸ்கரிக்கின்றேன்.

கழறொழு மன்பர்க் காறு சாத்திரங் கவிசெய் பான்மை
யெழிலுணர் வருளுங் கார்த்தி காதிக ளிருமை மூவர்
செழிதிருத் தாய ராய்க்கொள் திரண்மிகுந் தேசு மேய
மொழிமறை முடியி ளுறு முகவனைப் புகழு வோமால். 3

4. [illegible]

அபார கருணை சமுத்திரமாயும், அபரிச்சிந்ந வைபவத்தை உடைத்தாயும் இருக்கின்ற ஸ்ரீமீனாக்ஷி அம்பிகையை அபீஷ்ட சித்தியின் பொருட்டு ஆச்ரயிக்கின்றேன்.

கரைசெ யாத கருணைக் கடலினைத்
தருச வைபவந் தாங்கித் தசதிசை
யரசு செய்தரு ளங்கயற் கண்ணியை
யுரைசெய் வானம தூள்ளத் திருத்துவாம். 4

5. [illegible]

ஜீவன் முக்திப்புரிக்கு நாதராயும், சச்சிதாநந்த விக்கிரகராயும், எல்லா இஷ்டத்தையும் கொடுக்கின்றவராயும், மாயியாயு மிருக்கின்ற ஸ்ரீசுந்தரேசுவரரை நமஸ்கரிக்கின்றோம்.

ஜீவன் முக்திப்பு ரிக்கிறை யாகியே ஜீவர்
ஆவன் முற்றிடச் செய்திடு மறிவுமெய்ச் சுகமா
மேவல் செய்திட மாயையைத் தம்வய மியற்றும்
மூவர் முன்றொழுஞ் சுந்தரர் முளரிநந் துணையே. 5

ந்ருத்யஸ்தாநே நடநரஸிகம் ரஸரூபிணம் |
ஶிவகாமாம்பயா யுக்தம் முக்திதம் ஶங்கரம் ஸ்துமஃ ||

கான்மாறி ஆடுகின்ற ஆட்டத்திற் பிரிய முள்ளவராயும், ரஸ ரூபராயும்,சிவகாமி அம்பிகையோடு கூடியவராயும், முக்தியைக் கொடுக்கின்றவராயு மிருக்கின்ற சங்கரரை ஸ்துதிக்கின்றோம்.

கன்ன லுங்கடு வெனவெனக் கருள்சிவ காமி
யன்னை யின்புற மத்தனை முத்தியீ பவனை
மன்ன வன்றொழ மாறியா டிடமங் கசிந்தே
பன்னு சங்கரன் றனைத்திநம் பணிந்திட டொழிப்பாம். 6

7. ஸநகாதிமஹாயோகிஸேவாராயிதசிந்மயம் |
தாரகம் பவவாராஶேர்தக்ஷிணாஸ்யம் குரும் பஜே ||

சநகாதி மகா முநிகளால் நன்றாய் ஆராதிக்கப் பட்ட சைதந்ய ரூபமாயும், சமுசார சமுத்திரத்தினைத் தாண்டுவிக்கின்றவராயும், இருக்கின்ற தக்ஷிணாமூர்த்தியான குருவினைப் பஜிக்கின்றேன்.

சன்மய மான சநகர்முன் முநிவர் சந்ததம் வந்தனை புரியச்,
சின்மய வடிவாய்ச் செககுரு வாகச் செப்புறுஞ் சங்கரா ரிய

ஞய்ப், புன்மைய தான குடும்பவெங் கடற்குப் புணையெனப் பொலிந்துந் ரணத்தைத், தென்மய மாகி யருடருங் குருவைத் திகமநந் தனினினைந் திடுவாம். 7

8. ஶ்ரீ பாண்ட்³யதே³ஶே மது⁴ஜிந்முநீஶ்வரை: ஸம்யக்பூஜி
தோ லிங்க³வர: ஸ்தி²தோ ய: | தம் ஶாலிவாடீஸ
ஹிதந்த³யாளும் ஶ்ரீராஜக²ட்³கே³ஶ்வரம் ஶ்ரயாம:॥

ஸ்ரீ பாண்டிய தேசத்தில் முன் மது வென்ற முநீஸ்வரரால் நன்கு பூஜிக்கப்பட்ட எந்த லிங்க ஸ்ரேஷ்டமிருக்கின்றதோ, அந்தத் தயாளுவாயும், சாலிவாடீஸ்வரியோடு கூடியும் இருக்கின்ற ஸ்ரீ ராஜ கட்கேஸ்வரரை ஸ்தோத்திரஞ் செய்வாம்.

பல்வள நிறைந்த பாண்டிநன் ஞட்டிற் பகர்மதுப் பிரிய மா முநிவன், நல்வளன் பெறுதற் கருச்சனை புரிந்த நற்றிரி புவநா யகனைச், சொல்வளல் வீர விறையவற் காகத் தோன்றிய கொற்றவா ளிறையை, நெல்வளர்த் தனையொ டிலகருணிதியை நெஞ்சினி னினைந்துபோற் றுதுமே. 8

9. மது⁴க்ஷேத்ரமிதி க்²யாதம் தத் ஸ்தா²நம் கலி
நாஶநம் | கோடீஶ்வரமிதி விக்²யாதம் ப³ஹு
ஸாது⁴பரிவ்ருதம் ॥

மது க்ஷேத்திர மெனக் கியாதி யடைந்ததாயும், கலியினை நாசம் செய்கின்றதாயும், கோடீஸ்வர ரென்று விசேஷமாகப் பிரஸித்தி அடைந்ததாயும், அநேகம் பெரியோர்களாற் சூழப்பட்டதாயு மிருக்கின்ற ஸ்தாநம் ஒன் றிருக்கின்றது.

உலகெனு மனையின் மலைமுலை யிலகு மொளிமணி யிணைத்தமா லையினி, லிலகுமாதாணிப் பாண்டிநன் ஞட்டி லிலகிடு மாதன மெல்லாக், கலிகளைக் களையு மதுப்புரங் கழனி கவின்

மிகு கோவிலூ ரென்று, மலிதவ நிறைந்த மாதவ ருறையு
மாண்புறு நகரமொன் றுளதால். 9

10. ஸஸ்தாநேஷ்வாத்மநிஷ்டைர்விஷயவிரதைஶ்சிவபக்தைர்மஹாத்மபி: | ஸமாவ்ருதோ முக்திராமலிங்கநாமா ஜ்ஞாநீ பவதி ||

அந்த ஸ்தாநத்தில் ஆத்ம நிஷ்டர்களாயும், விஷய விரக்தர்களாயும், சிவ பக்தர்களாயும், மகாத்மாக்களாயும் இருக்கின்றவர்களாற் சூழப்பட்டு முத்தி ராமலிங்க மென்ற பெயரை யுடைய ஒரு ஞாநி இருந்தார்.

அங்கக ரதனி லான்மனி னிலைத்தங் கருந்தலா திகளைமெய் வெறுத்தே, பொன்னெடுங் கடுக்கை வேணியற் போற்றும் புகழ் மிகு முனிவரர் போற்றப், பன்னுறு பதத்திற் பழமறைப் பொருளைப் பகர்ந்திட நிகழ்ந்தபோற் பதிந்த, நன்னெறி முத்தி ராமலிங் கேச ஞானமெய்த் தேசிக னிருந்தான். 10

11. ஸ்வாத்மாநந்தரதஸ்ஸதா ப்ரஹ்மபராயண: | வைபவம் தஸ்ய வக்தும் நாலம் ஸாக்ஷாச்சேஷோ பணீஶ்வர: ||

மகாத்மாவாயும், ஆத்மாநந்தத்தில் எப்பொழுதும் ரமித்துக்கொண் டிருப்பவராயும், சதா பிரஹ்மத் தியாநத்தில் மூழ்கினவராயும் இருக்கின்ற அவரது வைபவத்தினை நேரே கூறுதற்கு, ஆதிசேஷனும் சாமர்த்திய முடையவ னல்லன்.

பிரம வாநந்தப் பெருங்கடன் முழுகியே பிறிவறச் சுகித்தாடி, யொருமை மேயநன் மகத்துவன் விகற்பமி லொள்ளிய நிலைநிற்போன், கரும மேகிடக் கண்டவர் பிணியறக் கதிர்விடு கவின்வாய்ந்தோன், பெருமை பேசிடச் சேடனும் பின்னுறிற் பேசுறுந் தகைத்தாமோ. 11

12. யஸ்ய தேவீ ப்ரஸந்நா ஸா ஸர்வேஶ்வரீ ஸர்வதா | தஸ்மை தஸ்மை ஸாந்நித்யம் கரோதி ஸா கருணாவதீ ||

எவர்க்குச் சர்வேச்வரி தேவி சதா பிரசந்நமா யிருக்கின்றனளோ, கருணாவதியான தேவி அடிக்கடி தரிசனம் கொடுத்தனளோ.

சிக்கிற் றேசிகன் சேவடி சேவைசெய் திருநாண்
மக்கி னச்சுரம் வந்துற மாலயன் றேடுந்
தக்க வன்னையே கன்னியாய் முத்திநந் தணிப்பான்
புக்கி ருந்தன ளெனினவன் பெருமையார் புகல்வார். 12

காரை மாநகர்க் கேகியே கால்கள்நொந் திடவே
வீர மாதவன் வேண்டுக ளெனக்கருள் விமலை
சேரை யாவினிக் கோவிலூ ரெனச்செப்பிற் றேவன்
பேரை யேதினம் வழுத்தலல் லாற்பிறி துளதோ. 13

அன்னை நெல்லையா ளநுதின மகர்நிச மருகில்
முன்னவன்னுட னிருந்தருண் மொழிமொழிந் தனளேல்
பின்ன வன்பெரும் பெருமையைப் பேசநா வொன்றோ
சொன்ன வின்றிடுந் தகையது தொண்டரே சொன்மின்.

பிரம வித்தையின் பரம்பரை பெரிதினி னிலவ
அருமை வைத்தநன் மடமொன்றை யாற்றென வன்னையே
கரும முற்றுறக் கதலிமுற் பொருள்களை யருளின்
திரம தெத்துணை யாஞ்சொலத் தேசிகன் புகழே. 15

அன்பி னித்திய மங்கலை யையன்முன் றோன்றி
யன்ப வோருண்டைக் கிருவரு மண்மின மெனவே
என்பு ருகிய வன்பொடு மெழுந்தருள் புரிந்தால்
முன்பன் சீர்த்தியைச் சேடனு மொழியவோ மொழியீர்.

ஐய னார்முதற் றேவருந் தங்குறை யகற்ற
மெய்ய னரிடம் விண்ணப்ப மிழற்றுவ ரெனின்யாம்

தூய்ய ஞர்பதம் தொழுவதை விடுத்தொரு கணமும்
பொய்ய ருடன் வாழ்வதும் புகழ்கொலோ புகலீர். 17

எவனு லகினி லெழுதலா லெங்கணு மறையின்
உவம னின்றிய முடிபொரு ளோசையே மிகுத்த
பவம கற்றிடுஞ் சீடர்தம் பரம்பரை பரந்த
தவன்பெ ருமையை யறையுமா றெங்ஙனே யறைமீர்.18

சகரு ரவன்முன் வந்தருண் முறையெலாஞ் சகத்தின்
மிகக்கு யிற்றின மேலவ னுதித்தில னயின்
புகல்வ தெங்ஙன்யாம் மறைமுடிப்பொருளினை யிருணின்
றகல்வ தெங்ஙன மன்பரே யறைமினோ வறைமின். 19

சாத்தி ரக்கடல் விரிந்ததுஞ் சதுர்மறை விரிவுங்
கோத்தி ரத்திரள் விரிந்ததுங் கோவில்கள் விரிவும்
நேத்தி ரத்திரு நாதனே நேரின்முத் தீசக்
காத்தி ரந்தரி யானெனிற் காண்பவ ரெவரே. 20

13. ஸாக்ஷாச்ஶ்ரீ தக்ஷிணாமூர்த்திரூபஸ்ய
தேஹமாச்ரித்ய | ஸம்ஸாரஸாகராதுத்தார்ய சிஷ்யான்
குரு: ||

சாக்ஷாத் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தியான குருவே, அந்தத்
திருமேனியை அடைந்து, பஜித்தவர்களைச் சமுசார
சமுத்திரத்தினின்றும் கரையேற்றிக்கொண்டிருந்தார்.

தென்முக மாகி வைகுந் தேவனே தென்னு டற்ற
நன்மைசெய் யறத்தி னனே ஞானதே சிகனுய் வந்தே
புன்மையிக் கிருந்த வெம்மைப் புகழ்பெறப் புரிந்திட் டானுல்
தன்மையை யறிந்தி லாருந் தரணியின் மறுடர் தாமோ. 21

14. தஸ்ய சிஷ்யாஸ்ஸ விஷ்ணுர்ப்ரஹ்மாத்யாஸ்
ஸநகாதய: | சிவம்பராஹிய ஸ்வதேதா வாசக
ஸ்வ நாசக: ||

15. 𑌬𑍃𑌹𑌚𑍍𑌛𑍋𑌣𑌾𑌚𑌲𑍋 𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌃 𑌯𑌵𑍀𑌯𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑌾𑌹𑍍𑌵𑌯𑌃 । 𑌬𑌾𑌲𑍋 𑌵𑍃𑌦𑍍𑌧𑌶𑍍𑌚 𑌶𑍍𑌵𑍇𑌤𑌶𑍍𑌚 𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑍋 𑌵𑌿𑌰𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌬𑌹𑌵𑍋𑌽𑌭𑌵𑌨𑍍 ॥

அவர்க்குச் சிஷ்யர்களாக் விசேஷக் கியாதியுடைய சநகாதிகளே, சிதம்பரம், வெள்ளையன், குட்டையன், ஸ்கந்தன், பெரிய அருணாசலம், சின்ன அருணாசலம், குழந்தை என்னும் பெயர்களுடன் அவதரித்தனர். இவ்வாறு அநேக விரக்தர்கள் சிஷ்யர்களாக இருந்தார்கள்.

இத்தகை யிறைவன் றிருவடி பணிய விமையவர் வழுத்திடுஞ் சநகர், மெய்த்தவர் பலரு மடியவ ராகி மேதினி தனிலவ தரித்தார், சுத்தமெய்த் துறவி னிறையவன் சிறிய துறவிறை கருணைமா நிதியன், முத்தன்வெண் முநிவன் வாமநன் குழந்தை முருகன்முன் முநிவர்க ளளவோ. 22

16. 𑌏𑌤𑌤𑍍𑌸𑌾𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 । 𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌾𑌯𑍀𑌶𑌨𑌾𑌮𑌾𑌨𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌂 𑌪𑍍𑌰𑍀𑌣𑌯𑌨𑍍 𑌸𑌦𑌾 ॥

அவர்களோடுகூட பிரஹ்ம ஞானத்தை அறிய வேண்டுமென்ற விருப்பமுடையவராயும், அரசப்பரென்னும் பெயரை யுடையவராயு மிருந்த அந்த மகான், சதா தம் சற்குருவிற்குத் திருப்தி யுண்டாகுமாறு சேவைசெய்து வந்தார்.

செப்பிய முநிவர் தம்மினத் தோடுஞ் செகம்புக ழசுவத்த நாதன், ஒப்பறும் பிரம முணருவான் விரும்பி யொப்பறுங் குருபாற் பணிந்தே, யிப்படி யாவ னிப்படி மீது மிருப்பவன் குருப்பிரான் கழற்கன், பப்பிய மாநத்த னையனுர் மகிழ்வை மகர்நிச மடையவே புரிவான் 23

குருபணி தலைக்கொண் டார்க்கே குவலயம் பிரம மாகு
மொருபரப் பிரமந் தன்ன துருவமா யொளிரு மென்ப
திருமறை முடியி னோசை யியற்றியே காட்டி னால்
திருவா சப்ப னென்னுந் தெய்வமா முனிவ னன்றே. 24

வென்ற வைம்புலச் சசிவன்னன் விண்புக ழுதங்கன்
மன்றி லொன்றிய மாணிக்கந் தத்துவ ராய
வின்ற வன்னெலா மென்னெனக் குருபணி யியைந்தான்
அன்றி ருந்தமெய்த் தவர்களு மஞ்சின ரவன்பால். 25

17. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌤𑍍𑌵𑌂 𑌜𑌗𑌨𑍍𑌮𑌿𑌥𑍍𑌯𑍇𑌤𑍍𑌯𑍇𑌵𑌂𑌬𑍋
𑌧𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍁𑌃 । 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂𑌤𑌦𑍁𑌪𑌦𑍇𑌶𑍇𑌨
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥

அந்த முத்தி ராம லிங்க குருவும் (இவரைப் பார்த்து) நீயே பிரஹ்மம், ஜகத்துப் பொய் யென்று போதித்தார். அந்தச் சற்குரு உபதேசத்தினால் (இவரும்) பிரத்திய காத்மாவின் ஸ்வரூபத்தினை அறிந்தார்.

சுவரு றைந்திடு மோவியஞ் சுவரெனச் சுயமாம்
பவமு தலிய நினைவுகள் பரமென நினைந்தச்
சிவசொ ரூபநீ யாகுதி சின்மய மெல்லாம்
நவமி குமர சப்பனே யென்றன னாதன். 26

18. 𑌵𑌿𑌦𑍇𑌹𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑌦𑍍𑌗𑍁𑌰𑍋𑌰𑌨𑍍𑌤𑌿𑌕𑍇
𑌽𑌵𑌸𑌤𑍍 । 𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌯𑌾𑌨𑌨𑍍𑌯𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌦𑌾𑌰𑌾
𑌧𑌿𑌤𑌵𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍁𑌂 ॥

அநந்ய பக்தியாகின்ற சுஶ்ருஷையினால் அந்தக் குருவை ஆராதித்துக்கொண்டு, விதேக முக்திவரை அந்தக் குரு சமீபத்தில் (நிழல் போல) வசித்து வந்தார்.

அருண்மொ ழியினைக் கேட்டன மகிழ்ந்தர சப்பன்
றெருண்மி குந்திடத் தெளிதரு நிட்டையே செய்வான்

பொருண்ம லிந்திடு மாரியன் பொலன்கழல் நிழல்போர்
விருண்ம ருண்டிடுஞ் சேவையே துணையென விருந்தான்.

19. ஏவந்நாம கியத்காலம் தத்ரைவ நிவ ஸம்ஸ்தத: | ஶிவக்ஷேத்ரோத்தமே வஸ்தும் யாவ ஜ்ஜீவம் மனோ ததௌ ||

அதன் பின் சிலகாலம் ஆண்டே வசித்து வரும் போது, உத்தமமான சிவ க்ஷேத்திரத்தில் ஜீவனுள்ள வரை வசிக்க வேண்டு மென்று மநதில் எண்ணினர்.

வந்த காரிய முடிந்தபின் வள்ளலும் பனிபோ
லந்த மின்றிய சிவத்தினி லழுந்தின னதன்பின்
னந்த மாதலத் தண்மினன். சிறிதுநா ளொருநா
ளெந்த மாதலத் துறைவது தனித்தினி நிலைத்தே. 28

20. ஶ்ருத்தநாயமுக்யம் ஶ்ரேஷ்டம் ஹாலாஸ்யமதி பாவநம் | ஶ்ருதௌ சிதம்பரக்ஷேத்ரம் க்வாத்ர வாஸ: ப்ரஶஸ்யதே ||

ஆருடையார் கோவில் சிரேஷ்டமாம், ஆலா சியம் (மதுரை) அதிபரிசுத்தமாம், சிதம்பர க்ஷேத் திர மிருக்கின்றது, இந்த மூன்றனுள் யாண்டு வசிப் பது சிலாக்கியம் ?

குருந்தை மாநிழற் கொண்டவன் றலத்திலோ குமரி
யிருந்த ரசுசெய் மதுரையம் பதியிலோ வினிய
விருந்து செய்திடு நகையினள் விரும்பிட நடஞ்செய்
யருந்த லத்திலோ வென்றெணி யமர்ந்தனன் யோகில்.

21. இதி விசிந்த்ய தஸ்யாஸ்ய ஶ்ரத்தாயீஶஸ்ய ஶங்கர: | ஸ்வப்னேऽவதத்ஸ்வம் ஹாலாஸ்யாமஹேஶ திஹாகராஜ ||

என்று சிந்தையோடு கூடியிருக்கும் இந்த அசுவத்த நாதருடைய ஸ்வப்பநத்தில் மிக ஆதரவோடு நீ ஆலாசியத்திற்கு வருக வென்று ஆஞ்ஞை பண்ணினார் (மீனாக்ஷி சுந்தரேசுவரர்களுடைய சந்நிதியில் தீபாராதனையையும் தரிசிப் பித்துச் சுவாமி மறைந்தார்).

அன்னைமுன் மவுலி தாங்கி யாசுசெய் நகருக் கின்னே
மன்னுற வருவா யென்ன மலர்ந்துநல் யோகில் வந்தே
சன்னிதித் தீப வாரா தனையுமெய்த் தனையுங் காட்டி
மின்னென மறைந்தான் முன்னர் மீனவ னான கோனே.

22. ஆஜ்ஞயாஸ்ய பக்தேஷ்டகாரிண:
கருணாநிதே: | ஸ பிப்பலேஶஸ்ஸம்ப்ராப
மதுராம் மதுராவதீம் ||

பக்தர்களுடைய இஷ்டத்தினைச் செய்விக்கின்றவராயும், கருணா நிதியாயு மிருக்கின்ற சுந்தரேசுவரருடைய ஆஞ்ஞையினால் அந்தப் பிப்பலேச (அரசப்ப)ரும் மதுரமா யிருக்கின்ற மதுரா புரியை வந்து நன்றாக அடைந்தார்.

அடியவ ரெண்ண மெல்லா மங்கொடி முடிக்கு மையன்
கடனிதிக் கருணை யாளன் கவின்மிகும் பெயரை யுற்றோ
படியினி லாணை யிட்ட படியினி லசுவத் தேசன் [ன்
றொடியினி லால வாயை நண்ணிதி னண்ணி னால்.

சென்றவன் சுந்த ரேசச் செல்வனு முமையும் வாழும், பொன்றிகழ் கோயிற் புக்கான் பொன்னின்றா மரையிற் றோய்ந்தே, நின்றவண் கரியைத் தந்தை தாயினை நெடுவேற் றேவை, வன்றவன் மநமு வந்தே வழுத்தியே வணங்கி னானே.

23. தஸ்யா தக்ஷிணதிக்பாகே க்ருததாராநுஸாரி
தீர்த்தே | ஸ்நாத்வா ஸ க்ருஷ்ணம்ஸ்நேஹவத்ருத்வ விரம்
ஜகா ||

மதுராபுரியின் தென்றிசையி லிருக்கின்ற கிருத மாலாநதிக்கரையில் உள்ள ஒரு மடத்தில் அவர் அநேக காலம் சந்தோஷத்துடன் வசித்துக் கொண்டிருந்தார்.

வணங்கிய பின்னர் மன்னும் மதுரைமா நகரின் றெற்கில்
மணங்கமழ் கிருத மாலை மாநதிக் கரையி னோர்பால்
இணங்கிய மடமொன் றி லிருந்தன னெடுநா ளின்பாய்க்
குணங்களுக் கிடம தான குருவா சப்ப மேலோன். 33

24. [illegible]

25. [illegible]

26. [illegible]

அந்தப் பட்டணத்திற்கு இஸ்வரராயும், சகல ஜகத்திற்கும் அதிபராயும், மேலான பிரஹ்ம வித்யா ஸ்வரூபியான மீனாக்ஷிக்கு நாயகராயும்,

இவ்வள வென்று அளவிடக்கூடாத கருணையினாற் பூர்ணமான மநத்தினை யுடையவராயும், ஏழைகளை இரக்ஷிப்பதில் அதிக ஆதரவுடன் கூடினவராயும், ஆச்சரியமான லீலா விநோதத்தினை யுடையவராயு மிருக்கின்ற

சுந்தரேஸ்வரருடைய சரித்திரத்தினைப் பிரமரிஷிகுல சூடாமணியாயுள்ள அந்த ஒரு அகஸ்திய முனிவ ரன்றி யாவர் வர்ணிக்கச் சமர்த்துடையராவர்.

கூடன் மாநகர்க் கிறைவனுய்க் குலவுல கிறைஞ்சாய்த்
தேடு போறி வுருவமாந் தேவிமீ னும்மை
கூடு நாயக னுகியே கொளுமள விலதாய்
நாடு சீர்த்தயை நிறைந்துள நற்றிரு வுளனுய். 34

எம்மை யேநிக ரேழைக டமைப்புரப் பதுவே
செம்மை யாகிய கடனெனத் திரமுறும் பெரியோன்
அம்ம வாவெனு மற்புத லீலைசெய் யழகன்
நம்மை யாளுடை யிறைபுகழ் நவில்பவ ரெவரே. 35

சுமாயாவிலுவாயொயிவாஹாக்கீகாஸணக்ஷஂ।
ஶோகக்ணகவாதாவீஷூஹக்ஷணஉக்ஷிணே॥

28. வாஷ்வத்ருதிவஸஂ ஶ்ராயிவிஂயூமவுநி
யாதநே। ஹரிஂ ஹரஂ காஸயிக்வா உஷ்டே ஶெ
ஷண வஉஃவஉே॥

29. க்ஷாஉக்ஷஹாமஸஉதாகஸஂ ஶோகாதிரு
யாஂதயெ। உாக்ஷிணாத்ஹிதாயெயாஷூஉ
திஷவஸெத்ருகே॥

அகாதமா யிருக்கின்ற எல்லாச்சமுத்திரங்களையும் உள்ளங்கை ஜலமாய்ச் செய்வதில் சமர்த்தராயும், லோக கண்டர்களான வாதாபி, இல்வலனைப் பக்ஷணம் செய்வதில் சமர்த்தராயும்,

சூரிய சந்திரர்களுடைய போக்கு வரவைத் தடுத்த விந்தியனுடைய கர்வத்தினைப் பங்கம் பண்ணினவராயும், குற்றாலத்தி லிருந்த விஷ்ணுவைச் சிவலிங்கமாகச் செய்து, துஷ்ட வைணவர்களுக்குத் துக்கத்தினைக் கொடுத்தவராயும்,

உலகத்தினுடைய துன்பத்தை நிவிர்த்திக்கும் பொருட்டுப் பூமியினுடைய தென்றிசையில் வந்து

சமன் செய்தவராயும், தக்ஷிண திக்கி லிருக்கின்ற ஜனங் களுக்கு இதம் செய்யும் பொருட்டு ஈஶ்வரனிடத்தி லிருந்து திராமிட (தமிழ்)ச் சூத்திரத்தினை அடைந்தவ ராயும்,

பிரமகல் லிருடி குலத்தினிற் சிரத்திற் பிறங்கிய மணி யெனப் பெரியோன், கரையறு கடல்கண் முழுதையு முளங் கை கதுவுற மாந்திட வுரியோன், இருமுல குறுமுள் ளென் னும்வா தாபி யில்வலர் தமையயி லரியோன், இரவியி னில வின் செலல்குலை மலையை யேப்பமிட் டடக்கிட வுரியோன்.

அரியினை யரனுச் செய்தே யவஞ்செய்வை ணவருக் காக,எரியனு ரிழைத்த மேலோ னித்தரைத் துயரைநீக்க,வுரிய தென் றிசையி னின்றே யுலகினைச் சமமாய் வைத்தோன், பெ ரியதென் மக்கள் வாழப் பெருமன்பாற் றமிழைப் பெற்றோன்.

30. 𑌶𑌿𑌵𑍋𑌽𑌹𑌂𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑍍𑌛𑌿𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌰 𑌵𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 । 𑌨𑌿𑌜𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌸𑌦𑌾 𑌧𑍍𑌯𑌾𑌤 𑌶𑍍𑌰𑍀𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌚𑌰 𑌣𑌾𑌂𑌬𑍁𑌜𑌃 ॥

31. 𑌅𑌨𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑌪𑌸𑌾 𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌿𑌤𑌸𑌦𑌾𑌶𑌿𑌵𑌾𑌤𑍍 । [illegible] 𑌵𑌂 𑌜𑌗𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌃 ॥

"சிவனே நான்" என்னும் பாவனையினால் சாக்ஷாத் ஈஶ்வரனுக்கு இரண்டாவது ஈஶ்வர விக்கிரகராயும், தமது சித்தத்தில் ஸ்ரீ சுப்பிரமணியருடைய பாதார விந்தத்தைச் சதா தியானஞ் செய்து கொண்டிருக் கின்றவராயும்,

ஒருவராலும் சாதிக்கக் கூடாதிருக்கின்ற தபசி னால் சந்தோஷத்தினை யடைந்த ஸ்ரீ சதா சிவனிடத்தி னின்றும் சர்வப் பிராணிகளுக்கும் குருவாயிருக்கும்

தன்மை பெற்று ஜகத்குருவாயும், இருக்கின்ற (அகஸ்திய மகரிஷியையன்றி யாவர்வர்ணிக்கச்சமர்த்தராவர்).

நற்சிவ ஞானே யென்னும் நல்லபா வனையி ஞனே
சிற்சிவ மாகி வேரோர் சிவமெனத் திகழுந் தேவன்
சொற்சுவைக் குமரன் ருளைச் சொந்தமாய்ச் சிந்தைசெய்வோன்
சற்சன ரெவருஞ் செய்யாத் தவத்திஞற் சிவத்தைப் போற்றி.

மகிழ்வினை யுஞற்றி லோக குருவென மண்விண் ணெல்லாம்
புகழ்வினை புரிய வாழ்வோன் புண்ணிய னகத்தி யேசன்
றிகழிவன் றன்னை யன்றித் திரிபுர மெரித்தோன் சீர்த்தி
புகழ்பவ ரெவரோ யிந்தப் புரம்பதி ஞலி லம்மா. 39

32. ஜகதாமபி ஸர்வேஷாம் ஜநகௌ பவநாசநௌ | விசேஷாத் ஸ்வஸ்வ பக்தாநாம் மீநாக்ஷீ ஸுந்தரேச்வரௌ ||

33. பக்த்யா நித்யம் ஸம்யக் ப்ரதக்ஷிண நமஸ்க்ருதை: | ஸந்தோஷயந்ந்யவாஸாயம் ஆலயேஸ்வத்த நாயக: ||

சர்வஜகத்திற்கும் மாதா பிதாக்களா யிருப்பினும், (அரசப்பர்) பாவனு பலத்தின் விசேஷத்தினுல், தமது மாதா பிதாக்களாய மீனுக்ஷி சுந்தரேஸ்வரர்களை,

பக்தியோடு நாடோறும் நன்ருகப் பிரதக்ஷிண நமஸ்கார ஸ்தோத்திரங்களால் (ஈஸ்வரனைச்) சந்தோஷஞ் செய்வித்துக் கொண்டு ஆலாசியத்தில் இந்த அசுவத்தநாதர் வசித்துக்கொண் டிருந்தார்.

அப்படி வசித்துக்கொண்டு வரும்போது பங்குனி உத்தரத்தில் நடக்கின்ற குருபூஜைக்குக் கோவிலூருக்கு வருஷந்தோறும் போய் வந்து கொண்டிருந்தார். ஒரு வருஷத்தில் குருபூஜைக்கு ஒரு வாரத்திற்குமுன்

சுந்தரேஸ்வரர் வந்து மதுரையின்கண் குருபூஜை நடத்துக அங்குச்செல்லவேண்டாம் என்று உத்தரவு கொடுத்ததை லக்ஷியம் பண்ணாமல் குரு விஷயத்தில் ஈசுவர வாக்கியம் பெரிதல்ல வென்று கருதி மடத்திலிருந்து புறப்பட்டு சந்நிதி மண்டபத்தில் வந்து உட்கார்ந்தவுடன் ஸ்வப்நத்தில் குரவரெழுந்தருளி நீ கோவிலூருக்கு வரவேண்டாம் இவ்விடத்தில் குருபூஜை நடக்கும் நீ அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம் தடைபடா தென்று கூறித் தெற்கு வாசலி லிருக்கின்ற நாயகர்மார்களுக்கும் இந்தக் குருபூஜையை நீங்கள் எல்லோரும் சேர்ந்து நடத்தவேண்டுமென்றும் ஆஞ்ஞை செய்தார். உத்தரவான பிரகாரம் அவர்களும் அவ்வாறே நடத்தி வந்தார்கள்.

உலகினை வருக்குந் தாயாய்த் தந்தையா யொளிர்ந்திட் டாலும்
பலகலை யசுவத் தேசன் பாவனைப் பலத்தி னானே
யிலகினை யத்த னாக்கு மெழிலிறை மீன்க ணாளைத்
திலகமெய் யன்பி னானே திநம்வலம் வந்து போற்றி. 40

பவமகல் துதியி னானே பலமுறை மகிழ்வித் தாடிச்
சிவமக மெனவே மன்னுஞ் சிந்தையோ டால வாயிற்
றவமுற வாழ்ந்து வந்த சமயம்பங் குனிநன் னாளிற்
சிவகுரு பூசை யெய்திற் செல்லுவன் கோவி லூர்க்கே. 41

பற்பல வருட மிந்தப் படிநடந் திடவே யோர்கால்
சிற்பரன் பூசை சேரச் செல்லுவா னுன்னு முன்னே
கற்பரக் கரிக்கிக் கீந்த கவினிறை யோகிற் றோன்றி
முற்பரன் பூசை யிங்கே முடித்தியங் கேக வேண்டாம்.

என்றருள் புரிந்துங் கேளா தெழிற்குரு விடயந் தன்னின்
மன்றவ னுரையுங் குன்று மாமென மடத்தி னின்றுஞ்
சென்றவன் மண்ட பத்திற் றேவசந் நிதியிற் சேர
இன்றவ னுளத்தின் ஞான தேசிக னிலங்கிக் கூறும். 43

மைந்தநீ கோவி லூரென் மாநகர்க் கேகவேண்டா
மந்தயில் லெனது பூசை யற்புத மாக வேதா
ணிந்தமெய்ப் பதியி லேயே யிலங்கிடுங் கவலை யென்னே
சிந்திநின் சிவசொ ரூப மென்றனன் சிவமாய் நின்றோன்.

தென்றிசை வாயில் வைகுந் திவ்விய நாய்க்கர் மார்நீர்
என்றனிப் புதல்வ னுற்றும் பூசையை யிசைமி னென்னு
மன்றிசை நடனன் கூற மகிழ்வொடும் பெருவாழ் வீதா
லென்றவர் பேசிப் பூசை யெழில்பெற நடத்தி னரே. 45

34. ஸ்வாவெஸ ச உெ ஶஂஹ ஂ வஜயநு
ரு ஂ்ர ஂவீஂகெ | வ ஂவெஷ்நுபெடி.ஶஂ ஸூரயநு
ஸ நிநாய ஸஹ ஂவாஸ்ராநு ||

கஉாவிஃ ஸ்வஸூராஜெவீ ஸவீஹிஸ்தவ்ஸஹா
ஶு ஊ |

(அவர்) தாம் வசிக்கும் மடத்தில் குருபீடத்தில் சம்புவாகிய நடராசரைத் தியானித்துப் புஷ்பங்களால் பூஜித்து அநேக காலம் வசித்து வந்தார்.

ஒருகால் அவர் வசிக்கும் மடத்தில் மீனாக்ஷிதேவி சகிகளோடு ஸ்வப்நத்தில் வந்தனள்.

தானுறை மடத்திற் றேசிக பீடந் தனிலட னேசனைத் திகழு, ஞானமாய் நினைந்து மலர்கொடு போற்றி ஞாதுரா தியகழன் றரிய, மோனமா நிலையி லிருந்திடு காலை மும்மூலைச் சயற்கணி யனையும், வானுறை தனது சேடிய ரோடும் வந்த னள் மைந்தன்றன் யோகில். 46

35. ஶ்ரூமத்ஶாஜுயஞீஂ தாநு ஷ்டா ஸவ்ய
ஸ்தஊாஸூ ஂவநு | ஶ்ரூமெஞ்ஶஃக ஂவஸ்தீதிஎ
வீஂ ஸா கிஂகரொஊஹு |

36. ஸ ஂஸ்ரயாவஊ ஂவெஷ்ந ஸஂெமநாயஂ

